# நாஞ்சில் நாட்டு கல்வெட்டில் மன்னர் மார்த்தாண்ட வர்மா மகாராஜா (கி.பி. 1729 - கி.பி. 1758)

முனைவர் ஞா. புஷ்பராஜ்,

## முன்னுரை

திருவிதாங்கூரின் ஒரு பகுதியாக நாஞ்சில்நாடு இருந்தது ஆயினும் இங்குள்ள மக்கள் தமக்கென்று ஒரு கலாச்சாரத்தை, பண்பாட்டை, மண் வளத்தைக் கொண்டிருந்தனர். திருவிதாங்கூரின் நெற்களஞ்சியமாக இருந்த நாஞ்சில் நாடு இந்த நாட்டின் வரலாற்றில் முக்கிய பங்கு வகித்தது. திருவிதாங்கூர் அரசர்களின் வரலாற்றை எழுதுவதற்கு நாஞ்சில் நாட்டில் கல்வெட்டாதாரங்கள், ஓலை ஆவணங்கள் மற்றும் செப்புப்பட்டயங்கள், தாள் சுவடிகள், நாணயங்கள் ஆகியன துணை புரிகின்றன.

## எல்லை

இந்திய நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் சகிய மலைக்கும் அரபிக்கடலுக்கும் நடுவில் திருவிதாங்கூர் உள்ளது. இப்பகுதி இயற்கை அழகினாலும் செல்வச் சிறப்பினாலும் மக்களின் மனதைக் கவரும் ஒரு நாட்டுப்பகுதியாகும். இதன் வடக்கே கொச்சியும், கோயமுத்தூர் மாவட்டமும், கிழக்கே மதுரை, இராமநாதபுரம், திருநெல்வே- மாவட்டங்களும், தெற்கே இந்தியப் பெருங்கடலும், மேற்கே அரபிக்கடலும் எல்லைகளாக அமைந்திருந்தன.[1] இதன் பரப்பு 18,153 சதுர கி.மீ. ஆகும்.[2]

## பெயர்க்காரணம்

திருவிதாங்கூர், வேணாடு, வஞ்சி தேசம், திருவடிதேசம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது. வஞ்சி தேசம் என்பது தருமதேவதையின் நாடு என பொருள்படும். மேலும் செல்வத்தின் நாடு என்பதையும் குறிக்கும். சேர மன்னர்களின் விருதுப்பெயர் 'திருவடி' என்பதனால் அவர்கள் ஆட்சி செய்த இடம் 'திருவடிதேசம்' எனப் பெயர் பெற்றது. பழைய கல்வெட்டுகளில் 'முதாங்கோடு' என்ற பெயர் காணப்படுகிறது.[3] இப்பெயர் நாளடைவில் 'திருவிதாங்கோடு' என மருவி வந்துள்ளது.

**மார்த்தாண்ட வர்மா மகாராஜா (கி.பி. 1729 - கி.பி. 1758)**

பதினெட்டாவது நூற்றாண்டில் திருவிதாங்கூர் கேரள நாட்டின் தென்கோடியில் இருந்தது. புகழ் நிறைந்த இந்தத் திருவிதாங்கூர் பேரரசை ஆட்சி செய்த மன்னர்களில் இன்றும் பெருமைக்குரியவராகக் கருதப்படுபவர் மகாராஜா மார்த்தாண்ட வர்மா ஆவார். இவர் கி.பி. 1729 முதல் கி.பி. 1758 வரை ஆட்சி செய்தார்.[4] மார்த்தாண்டவர்மா காலத்தில் கொல்லம், கொட்டாரக்கரை, நெடுமங்காடு, காயங்குளம் முத- ய இடங்களைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். திருச்சிராப்பள்ளி 'நவாப்' திருவிதாங்கூரின் கிழக்கு எல்லைப் பகுதியில் கொள்ளை அடிப்பதற்கு முயன்று வந்தார். அவரைத் துரத்தியடித்துத் தம் பேரரசை நிலைநிறுத்தியவர் இம்மன்னர் ஆவார். போர்கள் முடிந்தபிறகு தனது பேரரசில் சமாதானத்தை நிலைநிறுத்தக் கலகங்களை அடக்கினார். இதனால் மார்த்தாண்டவர்மாவைக் கொல்லுவதற்குப் பகைவர்கள் பலவகையிலும் இரகசியமாக முயன்று வந்தார்கள். ஆனால் மன்னன் தன் அறிவுக்கூர்மையாலும், தந்திரத்தினாலும் அவர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டார்.

வியாபார நோக்கத்தோடு வந்து நாடு பிடிக்க எண்ணிய வெளிநாட்டுக்காரர்களைத் துரத்தி அடித்தார். குறிப்பாக இவரது காலத்தில் 1741-ஆம் ஆண்டு[5] நடந்த குளச்சல் யுத்தம் இன்றளவும் மன்னரின் புகழைப் பரப்பி நிற்கின்றது. டச்சு வீரன் டிலனாய் மார்த்தாண்ட வர்மாவால் பிணைக்கைதியாகப் பிடித்துவரப்பட்டு, பின்னர்த் திருவிதாங்கூர்ப் படைத்தலைவன் ஆக்கப்பட்டான். போர் நடந்த குளச்சல் கடற்கரையில் வெற்றித்தூண் நடப்பட்டதை இன்றும் காணலாம். திருவிதாங்கூர் அரசனின் தலைமை இடமாகப் பத்மநாபபுரம் அரண்மனை செயல்படத் தொடங்கியது. அதன் பின் மார்த்தாண்டவர்மா கி.பி.1750-இல் நாட்டைத் திருவனந்தபுரம் பத்மநாபசாமிக்கு அர்ப்பணித்துத் திருப்படித்தானம் செய்தார்.[6]

**உதயகிரிக் கோட்டை**

மார்த்தாண்ட வர்மாவால் கி.பி.1741-இல் குளச்சல் போரில் போர்க் கைதியாகப் பிடிபட்ட டச்சு கடற்படை வீரர் டிலனாயின் தனித்திறமையினை உணர்ந்து மன்னர் அவரைத் திருவிதாங்கூர்ப் படையிலேயே சேர்த்துக் கொண்டார். அப்போதுதான் உதயகிரியின் மண்கோட்டை கற்கோட்டையாக உருமாற்றம் அடைந்தது. டிலனாயின் மேற்பார்வையில் உதயகிரிக்கோட்டையின் மண்கோட்டைச்சுவர் அகற்றப்பட்டுக் கற்கோட்டைச் சுவராக மாற்றப்பட்டது. கோட்டையானது 260 அடி உயரமுள்ள ஒரு குன்றைச் சுற்றி 84¾ ஏக்கர் பரப்பளவில் 2808.60 மீட்டர் நீளத்தில் அமைந்துள்ளது. இக்கற்கோட்டையின் சுவர் 18 அடி உயரத்தில் 3 அடி அகலத்தில் கட்டப்பட்டுள்ளது. சுவரானது கற்களாலும், கடுக்காய், கருப்புக்கட்டி, சுண்ணாம்பு, கத்தாழைச்சாறு என்ற கலவையினாலான சாந்தாலும் கட்டப்பட்டுள்ளது. நான்கு மூலைகளிலும்

மூலைக்கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுவரின் உச்சியில் கண்காணிப்பு வளைவுகள் காணப்படுகின்றன. கோட்டையின் தென்புறத்தில் மூன்று சிறிய வாயில்களும், மேற்புறத்தில் பிரதான நுழைவாயிலும் உள்ளன.[7] கீழ்ப்புறத்தில் இரண்டும், மேற்புறத்தில் ஒன்றும், தென், வட புறங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் ஐந்து கண்காணிப்பு மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டையின் உட்பகுதியில் கோட்டைச் சுவரி- ருந்து மூன்று மீட்டர் அகலத்தில் சுற்றிலும் பிள்ளைக் கோட்டைச் சுவர் கட்டப்பட்டுள்ளது. வடமேற்கு மூலையில் நீராடுவதற்கான படித்துறை ஒன்றும் காணப்படுகிறது. கோட்டையானது கி.பி.1741 முதல் கி.பி. 1744 வரையிலான காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

**படைவீடு**

டிலனாயின் மேற்பார்வையில் உதயகிரிக்கோட்டை ஒரு படைவீடாக செயல்பட்டது. திருவிதாங்கூர்ப் படையினருக்கு ஐரோப்பிய முறையில் போர்ப் பயிற்சியும், நவீன ஆயுதங்களும் வழங்கப்பட்டன. ஐரோப்பிய படைப் பிரிவுகளைப் போல் திருவிதாங்கூர்ப் படையமைப்பை டிலனாய் பலபிரிவுகளாக மாற்றி அமைத்தார்.[8] உதயகிரிக்கோட்டை ஆயுதங்கள், படைத்தளவாடங்கள் தயாரிக்கும் கூடமாகவும், சேமிப்புக் கிடங்காகவும் இருந்துள்ளது. கோட்டையின் வளாகத்திலேயே பயணியர் விடுதிக்கு வடக்கே ஒரு வார்ப்படச்சாலை (Iron foundry) உள்ளது. பயணியர் விடுதிக்குத் தென்மேற்கே முகாம் கூடத்தையொட்டியுள்ள இடத்தில் இரும்பு உருக்குகள் ஆங்காங்கே காணப்படுவது இதனை உறுதி செய்கிறது. பீரங்கிக் குண்டுகள் வெவ்வேறு எடைகளில் தயாரிக்கப்பட்டன. இவை கோட்டை வளாகத்திலேயே கிடைத்துள்ளன. குண்டுகள் அதிகபட்சமாக 8.400 கி.கி எடையிலும் குறைந்தபட்சமாக 1.180 கி.கி. எடையிலுமாகப் பதினான்கு வெவ்வேறு எடைகளில் தயாரிக்கப்பட்டன. இதன்மூலம் உதயகிரிக்கோட்டை ஆயுதங்கள் மற்றும் படைத்தளவாடங்கள் தயாரிக்கும் கூடமாகவும் சேமிப்புக் கிடங்காகவும் இருந்துள்ளது தெரியவருகிறது.

திருவிதாங்கூர் அரசு விரிவாக்கம் பெறுவதில் உதயகிரிக்கோட்டை முக்கிய பங்காற்றியுள்ளது. காயங்குளம் முதல் கொச்சி வரையிலும், கிழக்கேயிருந்து வந்த படையெடுப்புகளிலும் இராமய்யன் தளவாயுடன் துணையாக டிலனாய் சென்று மன்னருக்கு வெற்றிகளைப் பெற்றுத் தந்தார். இவ்வெற்றிகளின் காரணமாகத் திருவிதாங்கூர்ப் படைக்கு டிலனாய் தலைமைப் படைத்தளபதியாக மன்னரால் பணியமர்த்தப்பட்டார். இதனால் மக்களால் "வ- ய கப்பித்தான்" (Great captain) என அன்புடன் அழைக்கப்பட்டார். மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்திற்கு பின்பு திருவிதாங்கூர்

மகாராஜாவான “கிழவன் ராஜா” என்று அழைக்கப்பட்ட கார்த்திகைத் திருநாள் இராமவர்மா (கி.பி.1758-1798) காலத்திலும் டிலனாய் தொடர்ந்து பணியாற்றினார்.

இவர் காலத்துக் கல்வெட்டுகள் பல தென்திருவிதாங்கூரில் பல இடங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கன்னியாகுமரி மாவட்டம் காட்டுப்புதூரில் 1740-ஆம் ஆண்டு, நேதாஜி வா- பர் சங்கத்தின் முன் உள்ள தனிக்கல்- ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். இதில் நாஞ்சில்நாட்டு செண்பகராமன் புதூரைச் சேர்ந்த சிவனடியான் நாராயணன் என்பான் தம் தகப்பனாரால், நந்தவனத்துக்கும் பாகைக்கரை ஒலை மடத்துக்கும் நிலம் அளிக்கப்பட்டிருந்ததை உறுதி செய்தளித்துக் குறிக்கப்பட்டுள்ளது.[9]

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் இறச்சக்குளம் என்ற ஊரில் கி.பி.1743-இல் வெட்டப்பட்ட கல்வெட்டு, அவ்வூரிலுள்ள கல்மடம் அருகேயுள்ள சுமைதாங்கிக் கல்- ல் காணப்படுகிறது. இதனை புத்தேரி ஊரைச் சேர்ந்த சங்குப்பிள்ளை, இராமலெட்சுமி வகையார் நிறுவினார்.[10]

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அணைகளில் பழமையான அணை ‘பாண்டியன் அணை’ ஆகும். முற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்ற இவ்வணை பொன்மனை கிராமத்தில் பரளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டது.[11] பரளியாற்றின் நீரைப் பழையாற்றுக்குள் திசை திருப்பி விடுவதற்காக கட்டப்பட்ட இது பயனற்றுப் போன நிலையில் இதற்குக் கீழே திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவினால் புத்தர் அணை கட்டப்பட்டது. அணை கட்டும் பணி கி.பி.1735-இல் தொடங்கப்பட்டுக் கி.பி.1749-ல் முடிக்கப்பட்டது. இங்குக் காணப்படும் கல்வெட்டி- ருந்து அணையின் நீர் பழையாற்றுக்கும் புத்தனாற்றுக்கும் செலுத்தப்படுகிறது என்பது தெளிவாகின்றது.

இவ்வரசன் காலத்துப் பிறிதொரு கல்வெட்டுக் கன்னியாகுமரி மாவட்டம் வீரவநல்லூரில் கி.பி.1753-இல் முத்தாரம்மன் கோயில் முன்னுள்ள தனிக்கல்- ல் பொறிக்கப்பட்டுள்ளது. இது நாஞ்சில்நாட்டு வீரகேரளநல்லூரில் உள்ள தேசிகவினாயகப் பிள்ளையாருக்கும், சாமி தியாகராசருக்கும், அம்பலவாண சாமிக்கும் நித்திய வழிபாடும் சிறப்பு வழிபாடும் செய்வதற்காக அதே ஊரைச் சார்ந்த நமசிவாயம் சிவதாணுவப் பண்டாரப் பெருமாள் என்பார் நிலம் அளித்ததைக் கூறுகிறது.[12]

கன்னியாகுமரி மாவட்டம் கருப்புக் கோட்டையில் கி.பி.1754-இல் வய- ல் உள்ள தனிக்கல்- ல் பொறிக்கப்பட்ட இந்த மன்னன் காலக் கல்வெட்டு நாஞ்சில் நாட்டுக் கருப்புக்கோட்டையில் உள்ள

வள்ளிவிநாயகப் பிள்ளையாருக்கு மேற்படி நாட்டு மேற்படி ஊர் வள்ளியம்மை மகள் நாகருப்பிள்ளை நிலம் அளித்ததைச் சுட்டுகிறது.[13]

இதே ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று கன்னியாகுமரி கருப்புக் கோட்டையில் கைலாசநாதர் கோயி- ல் உள்ள தனிக்கல்- ல் காணப்படுகிறது. இக்கல்வெட்டு நாஞ்சில் நாட்டு கருப்புக் கோட்டையில் உள்ள ஸ்ரீ கயிலாயமுடைய நயினாருக்கு விழா பூசை ஆகியவைகள் நடத்துவதற்காக அதே ஊரைச் சார்ந்த வீரியப்பெருமாள் சிவதாணு நிலம் அளித்ததைக் கூறுகின்றது.[14]

கன்னியாகுமரி மாவட்டம் அழகியபாண்டியபுரத்தில் 1758-ஆம் ஆண்டில் அழகிய நம்பி கோயில் முக மண்டபத்தின் தெற்குப்பக்கச் சுவரில் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கோயில் மண்டபத்தில் திருப்பணி செய்வித்ததைக் குறிக்கிறது.[15]

## நூற்பட்டியல்


1. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, அகஸ்தீஸ்வரம் ஊர்க் கல்வெட்டு எண்-22.
2. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, அகஸ்தீஸ்வரம் ஊர்க் கல்வெட்டு எண்-23
3. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, அழகியபாண்டியபுரம் ஊர்க் கல்வெட்டு எண்-12.
4. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆரல்வாய்மொழி ஊர்க் கல்வெட்டு எண்-8.
5. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கன்னியாகுமரி ஊர்க் கல்வெட்டு எண்-10.
6. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கன்னியாகுமரி ஊர்க் கல்வெட்டு எண்-16.
7. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கன்னியாகுமரி ஊர்க் கல்வெட்டு எண்-68.
8. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கன்னியாகுமரி ஊர்க் கல்வெட்டு எண்-80.
9. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கன்னியாகுமரி ஊர்க் கல்வெட்டு எண்-82.
10. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சாமிதோப்பு ஊர்க் கல்வெட்டு எண்-1.
11. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சுசீந்திரம் ஊர்க் கல்வெட்டு எண்-26.
12. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சுசீந்திரம் ஊர்க் கல்வெட்டு எண்-53.
13. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சுசீந்திரம் ஊர்க் கல்வெட்டு எண்-64.
14. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சுசீந்திரம் ஊர்க் கல்வெட்டு எண்-74.
15. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சுசீந்திரம் ஊர்க் கல்வெட்டு எண்-76.